[7th May 1962

The Madras Preservation of Forests Act, 1959 (Convictions)

* 40 Q.—SRI J. MATHA GOWDER : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) நீலகிரியில் தனியார் காடு பாதுகாப்பு சட்டத்தின்கீழ் 1960–ம் ஆண்டு முதல் 1962–ம் ஆண்டுவரை எத்தனை பேர்களுக்குத் தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறது ;

(இ) மொத்த அபராதத் தொகை எவ்வளவு ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) 45 (up to 10th April 1962).

(*b*) ரூபாய் 1,350.

SRI J. MATHA GOWDER : ஸார், இதெல்லாம் தனியார் காடு. பெரிய பாரஸ்ட்கூட அல்ல. சாதாரணமாக, அப்படிப்பட்ட இடத்தில் ஒரு மரம் இருந்தால், அதை வெட்டினால்கூட அவருக்கு 100, 200 என்று மாஜிஸ்திரேட் கோர்டில் அபராதம் விதிக்கப்படுகிறது என்பதற்காகத்தான் இந்தக் கேள்வியை போட்டிருக்கிறேன். பெரிய பாரஸ்ட் இல்லை. சொந்தத்திற்காக, டொமஸ்டிக் பர்பசுக்காக உபயோகப்படுத்திக் கொள்வதாக இருந்தால், அதற்காக வெட்டினால் தவறில்லை என்கிற முறையில் இந்தச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்க இதை கனம் அமைச்சர் அவர்கள் பரிசிலனை செய்து, அதற்கு நல்லதொரு முடிவு சொல்ல முடியுமா ?

(பதில் இல்லை).

Tyre factory

* 41 Q.—SRI J. MATHA GOWDER : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையில் டயர் உற்பத்தி சாலை அமைக்கும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் என்றால், எப்போது அமைக்கப்படும் ?

(உ) ஆண்டுக்கு எத்தனை டயர்கள் உற்பத்தி செய்யப்படும் ?

(எ) எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) There is no proposal to establish a tyre factory in the public sector. Certain private industrialists have applied to the Government of India for the grant of licences to set up tyre factories in Madras.

(இ) No information is available.

(உ) & (எ) Since the matter relates to the private sector, it is considered not desirable to give the particulars.

SRI J. MATHA GOWDER : ஸார், தனியார் துறையிலே இந்த டயர் உற்பத்தி சாலைகளுக்காக சர்க்காருக்கு மனு கொடுத்திருக்கிறார்களா ? அப்படி மனு கொடுத்திருந்தால் லைசன்சுகள் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். அப்படி தனியார் துறையிலே டயர் உற்பத்திசாலை ஆரம்பிப்பதாக இருந்தால், எப்படி ஆரம்பிக்கப்படும் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : சென்னையைப் பொறுத்த அளவில் இரண்டு கம்பெனிகளுக்கு லைசன்சு வழங்கப்பட்டது. அதிலே ஒன்று உற்பத்தியை ஆரம்பித்துவிட்டது. மற்றொன்று உற்பத்தி தொடங்க இருக்கிறது. மூன்றாவது கம்பெனிக்கு 2, 3 தனிப்பட்டவர்கள் மனுக்கள் போட்டிருக்கிறார்கள். புதிதாக இனி கம்பெனிகளுக்கு லைசன்சு கிடைக்குமா, கிடைக்காதா என்பதும், அகில இந்திய ரீதியிலே நம்முடைய தேவைக்குப் போதுமான டயர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றதா, மேலும் வேண்டுமா என்பதை பரிசீலனை செய்து, அதன்படி விஸ்தரிக்கப்படுவதைப் பொறுத்துள்ளது.